** இதற்கிடையிலே இந்த வழக்கைப் பொறுத்தவரையில் ** it is being stayed by the Supreme Court ஆகவே இது சப் ஜுடிஸ் ஆகிறது. அதைப்பற்றிப் பேசக்கூடாது. அப்படிப் பேசியதைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழக்குமன்றத்திலே இருப்பதால் எது எது சப் ஜுடிஸ் என்று கருதப்படுகிறதோ அவைகள் எல்லாம் பின்னர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

அரிசி விலை உயர்வு

திரு என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அரசுக்கு மிகவும் அவசரமானது மட்டுமல்ல, மிக அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருப்பதை நான் உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது இப்போது சென்னை நகரத்திலே கிலோ அரிசிக்கு 50 பைசா திடீரென்று 2, 3 நாட்களில் உயர்ந்திருக்கிறது. இங்கே இருக்கக்கூடிய ஓட்டல்களில் பூராவும் விலையை உயர்த்தி விட்டார்கள். மதுரை வட்டாரத்தில் 2, 3 நாட்களில் 1 கிலோ அரிசி 1 ரூபாய் என்ற அளவிற்கு மார்க்கெட்டிலே உயர்ந்து விட்டது. அதோடு மட்டுமல்லாமல் தமிழக அரசினுடைய நியாய விலைக் கடைகளிலே அந்த தானிய வினியோகம் செய்வதையே நிறுத் விட்டார்கள் என ஏராளமான தந்திகள் எனக்கு வந்திருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அது தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தந்திகளை எல்லாம் எங்களிடம் கொடுத்துவிடுங்கள். நடவடிக்கை எடுக்கிறோம். (குறுக்கீடு). இதிலே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் வருகிறது. தஞ்சை மாவட்டத்திலே உள்ள நெல் வியாபாரிகளைப் பற்றியெல்லாம் வருகிறது. அதிலேகூடப் பேசலாம் மாண்புமிகு உறுப்பினர்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதனால் இதைப்பற்றி ஒரு தனி அறிக்கை வெளியிட்டு விவாதிக்க வேண்டியது அவசியம். காரணம் என்னவென்றால் ஆளுநர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

உரை என்பது பல கொள்கைகளைக் கொண்டது. அந்த உரையிலேகூட இது வராது. ஆகவேதான் இது ஒரு அவசரமான பிரச்சனையாக இருப்பதால் இதைப்பற்றி அறிக்கை அரசு சார்பிலே வைக்கப்பட்டு அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் செய்ய அரசு விதித்துள்ள தடை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், இரெ. இராசமாணிக்கம் ஆகியோர் ''தஞ்சை மாவட்டத்தில் தனியார் நெல் கொள்முதல் செய்யக்கூடாது என அரசு உத்தரவிட்டுள்ளதால், விவசாயிகள், அரிசி ஆலையில் பணியாற்றும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலை பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு, அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

திருவாளர்கள் குமரி அனந்தன், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், எஸ். என். இராமசாமி, இ. முத்துராமலிங்கம், என். எஸ். வி. சித்தன், பி. எம். தங்கவேல்ராஜ், என். சிவஞானம், கே. எம். தங்கமணி ஆகியோர் ''தஞ்சையில் வெளி வியாபாரிகளுக்கு நெல் கொள்முதல் செய்வதற்குத் தடை பிறப்பிக்கப்பட்டதால் விவசாயிகளின் நெல்லுக்கு சரியான விலை கிடைக்கவில்லை, இதனால் தஞ்சை விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.

திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், எம். செல்லமுத்து, டி. மணி. மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி ஆகியோர் ''தஞ்சை மாவட்ட விவசாயிகளின் நெல்லுக்கு நியாய விலை கிடைக்க வழியில்லாததால் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்து உள்ளனர்.

''தஞ்சை மாவட்டத்தில் வெளி வியாபாரிகள் நெல் கொள் முதல் செய்வதற்கு'' தடைவிதித்து அரசு வெளியிட்டுள்ள உத்திரவு குறித்து பேரவையின் 54 ஆம் விதியின்கீழ் கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர்.